## எங்கள் வரலாறு

1978 மதுரை மறை மாநில இயேசு சபையினர் கிழக்கு இராமநாதபுர மாவட்ட பகுதியில், தேவகோட்டையை தலைமையகமாக கொண்டு விடுதலைக்கான ஒரு பணியைத் தொடங்கினர். தலித் மக்களின் கண்ணியமான வாழ்வுக்காக கல்வி மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை முதன்மையான வழி முறைகளாக அப்பணியில் இருந்தது. கூட்டாக இயங்கிய இயேசுசபையினரும் உடன் உழைப்பாளர்களும் தங்களை பல்மேரா (PALMERA - People's Action and Liberation Movement in East Ramnad) குழுவென அழைத்துக் கொண்டனர்.

களப்பணிகள் தீவிரமடைந்தபோது, தலித் மற்றும் பிற புறக்கணிக்கப்பட்ட சமூகத்தினர் முழுமையான வளர்ச்சியை அடைய ஒரு பயிற்சி மையம் மதுரையில் தொடங்க வேண்டிய அவசியத்தை இயேசு சபையினர் உணர்ந்தனர். இதன் விளைவாக அய்டியாஸ் (IDEAS - Institute of Development, Education, Action and Studies) மையம் 1984 ஆம் ஆண்டு உருவானது. அதேவளாகத்தில், அனைத்து இந்திய கத்தோலிக்க பல்கலைக்கழக கூட்டமைப்பின் (AICUF) தமிழ்நாடு பிரிவும் தொடங்கப்பட்டது. பின்னர் அது 1999 இல் திருச்சிக்கு மாற்றப்பட்டது.

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பல்வேறு குழுக்களுக்கான தென்தமிழக பயிற்சி வளமையமாக அய்டியாஸ் சிறப்பான பங்காற்றி வருகிறது. சட்ட உரிமைகள் மற்றும் நலன்களை பெற்றனுபவித்து கண்ணியமாக வாழ இக்குழுக்கள் இயக்கங்களாக உருவெடுக்க வலுவூட்டுவதில் தொடக்கம் முதலே இம்மையத்தின் கவனம் இருந்துள்ளது.

1990-களின் இறுதியில் கவனத்தை புதிய திசையில் திருப்பியது: தலித் பெண்கள், வன்முறைக்கு உள்ளாகும் பெண்கள், விதவைகள் மற்றும் கையால் மலம் அள்ளும் துப்புரவுப் பணியாளர்களின் சமூக, அரசியல், சட்டம் மற்றும் பொருளாதார தளங்களை வலிமைப்படுத்துதலே அது.

2000 முதல், மக்கள் இயக்க அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கான திறன் வளர்ப்பு நிகழ்ச்சிகள், நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்டன. மேலும், பிரச்சினை அடிப்படையிலான பங்களிப்பு, வழிகாட்டுதல், நீதிமன்ற தலையீடுகள், ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் ஆகியவை முக்கிய செயல்பாடுகளாக இருந்தன. கருத்தரங்குகள் மற்றும் செயல்-பயிற்சி பட்டறைகள் வழியாக பங்கேற்பாளர்கள் தொடர்புத் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், ஊடகக் கல்வியைப் பெறவும், சமூக ஊடக தயாரிப்பு திறன்களை கற்கவும் வழி செய்யப்பட்டது. இவை தவிர, நிறுவனத்தின் பணியாளர்கள், மதச்சார்பற்ற அமைப்புகள், துறவற மற்றும் திருச்சபை அமைப்புகளுக்கும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்குகிறார்கள்.

Ideas
Institute of Development, Education, Action and Studies



## அய்டியாஸ் உங்களுக்கு வழங்குவது என்ன?

**01** மாணவர்கள், சமூகப்பணியாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் ஊக்க நிகழ்ச்சிகள்.

**02** மென் திறன்கள் (Soft Skills) மற்றும் தனிநபர் நற்பண்பு ஆளுமை திறன் வளர்ப்பு பயிற்சி பட்டறைகள்

**03** சமூகப் பகுப்பாய்வு மற்றும் அரசியல் அமைப்பு குறித்த பயிற்சி அமர்வுகள்

**04** அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளை திட்டமிடுவதற்கான பயிற்சி அமர்வுகள்

**05** அமைப்புகளை மதிப்பீடு செய்து மறு உருவாக்கம் செய்வதற்கான பயிற்சிகள்

**06** புதிய திட்டங்களை உருவாக்குவதற்கான பயிற்சிகள்

Ideas
Institute of Development, Education, Action and Studies


### அய்டியாஸ் மையம்

26 அ,வாழைத் தோப்பு, சிந்தாமணி ரோடு,
மதுரை - 625 001, தமிழ்நாடு.

78452 63850 ☎ 0452 - 2337968

contact@ideasmadurai.org

@Ideas Madurai

@maduraiideas

www.ideasmadurai.org


# INSTITUTE OF DEVELOPMENT EDUCATION ACTION AND STUDIES MADURAI

### அடையாளம் (IDENTITY)

வளர்ச்சி, கல்வி, செயல், மற்றும் ஆய்வுக்கான மையம் (IDEAS - Institute of Development, Education, Action and Studies) என்பது செயலுக்கு இட்டுச் செல்லும் ஆராய்ச்சி (Action Research), வாதாடும் நடவடிக்கைகள் மற்றும் பரப்புரைகளை எளிதாக்கும் ஒரு "திறன் வளர்ப்பு மற்றும் கருத்து வளமையம்" ஆகும்.

### பணி ((MISSION)

IDEAS தலித் மக்கள், பழங்குடியினர், பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் பிற புறக்கணிக்கப்பட்ட சமூகங்களை வலுப்படுத்த மக்கள் அமைப்புகள் மற்றும் இயக்கங்களை ஊக்குவித்து, ஆதரித்து, அவர்களின் கண்ணியம், உரிமைகள், வாழ்வாதாரம், அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் தலையீடு செய்து, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக அமைப்புகளுடன் உரிமை அடிப்படையிலான கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பார்வையை மேம்படுத்துகிறது.

### தொலைநோக்கு (VISION)

மனித உரிமைகளை மதிக்கும், அனைவரையும் உள்ளடக்கும், மதச்சார்பின்மை, பாலின சமத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் நேர்மையை மதிக்கும், நீதி மற்றும் மனிதாபிமானம் கொண்ட சமூகத்தை உருவாக்குவது.

### பணித் திசைகள் (THRUST Areas)

- சமூகப் பகுப்பாய்வு மற்றும் சமூகச் செயல்பாட்டில் திறன் வளர்ப்பு.
- அடித்தள மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்.
- மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்புக் கல்வியை ஊக்குவித்தல்.
- மக்கள் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், குடிமை மற்றும் மக்களாட்சி சமூக அமைப்புகள், அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.
- அறிவு வளங்களை உருவாக்கி வழங்குதல் மற்றும் செயல்பாட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல்.

Ideas
Institute of Development, Education, Action and Studies



## தலித் பெண்கள் கூட்டமைப்பு (DWF)

தமிழ்நாடு தலித் பெண்கள் கூட்டமைப்பு கண்ணியமான வாழ்வை தேடும் தலித் பெண்களை அமைப்புகளாகவும் கூட்டமைப்புகளாகவும் மாற்ற அணிதிரட்டல், ஊக்கமளித்தல், தலைமைகளை உருவாக்குதல் ஆகியவற்றைச் செய்வதே இந்த பிரிவின் முக்கிய நோக்கம். தற்போது மதுரை, திண்டுககல், தேனி, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் தலித் பெண்கள் வலுப்பெறும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தலித் பெண் தலைவர்களை ஊக்குவித்து, இயக்கங்களை உருவாக்கும் செயல் முறையில் அவர்களுடன் இணைந்து பயணித்தல். நிகழ்கால சமூக பிரச்சினைகளை பகுத்தறிய உதவுதல். பிற அமைப்புகளுடன், குறிப்பாக தலித் இயக்கங்களுடன், ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு செயல்பாடுகளை ஏற்படுத்துதல். எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் சட்ட உதவி வழங்குதல்

## கையால் மலம் அள்ளும் தொழில்முறை ஒழிப்பு (Eradication of Manual Scavenging)

கையால் மலம் அள்ளும் தொழில்முறை ஒழிப்புச் சட்டத்தை ("The Prohibition of Employment as Manual Scavenging and their Rehabilitation Act, 2013") நடைமுறைப்படுத்த வைப்பதே இப்பிரிவின் நோக்கம் ஆகும். மதுரை, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த, கிராமப் பஞ்சாயத்து அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு அளித்து வருகிறது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் துடிப்புடன் செயல்படும் தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கி, அவர்கள் தங்கள் பகுதிகளில் தொழிலாளர் பிரச்சினைகளை எடுத்துச்செல்ல துணை நிற்கிறது. இக்குழு 15 மாலை நேர கல்வி மையங்களைத் நடத்திவருகிறது. இது தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வியைத் தொடரவும், மாற்று வேலைகளுக்குத் தயாராகவும் உதவுகிறது. அவ்வப்போது வேலை வாய்ப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன.

## பன்மட்ட திறன் வளர்ப்பு (Multi-level Capacitation)

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் இயக்கத் தலைவர்கள் மற்றும் இளைஞர்களை, அறிவாற்றல் மற்றும் பகுப்பாய்வு திறன்களுடன் வலுப்படுத்தி, அவர்கள் தங்களின் இயக்கங்களை உரிமை அடிப்படையிலான பார்வையுடன் முன்னெடுத்து செல்ல துணை நிற்பதே இப்பிரிவின் முதன்மையான நோக்கம் ஆகும்.

ஒடுக்கப்பட்ட சமூக மக்கள், குழுக்களுக்கு இடையே தொடர்புகொண்டு, கூட்டு செயல்பாடு மற்றும் ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புகளை வழங்குவது இப்பிரிவின் இரண்டாவது நோக்கமாகும்.தலித் சமூகங்களுக்குள் அங்கீகரிக்கப்படாத துணை சாதிகள்,எடுத்துக்காட்டாக அருந்ததியர், புதிரை வண்ணார், குறவன் ஆகியோருக்கு தங்கள் அடையாளம், மரியாதை, கண்ணியம் ஆகியவற்றை பேணவும்,



கனவுகளை நனவாக்கவும் வாய்ப்புகள் அளிப்பது இப்பிரிவின் மூன்றாவது நோக்கமாகும்.

பயிற்சிப் பட்டறைகளுக்கு அப்பால், பல்வேறு இயக்கங்கள் இடையே கூட்டு செயல்பாடுகளை உருவாக்கி, பொதுவான பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து பதிலிறுக்க உதவுவதிலும் இப்பிரிவு கவனம் செலுத்துகிறது.

## கல் ஒட்டர்களுடன் பயணம் (Accompanying Kal Oddars)

கல் ஒட்டர் என்பது ஒரு இடம்பெயரும் சமுதாயம். இவர்கள் வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் இடம் பெயர்ந்து செல்கிறார்கள். இந்த சமூகம் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ரீதியாக மிகவும் பின் தங்கியதாக உள்ளது.

இவர்களுக்கான சட்ட விழிப்புணர்வு, குழந்தைகளுக்கு கல்வி, அரசு திட்டங்களைப் பெறும் திறனை மேம்படுத்தும் பட்டறைகள், அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் பெற உதவுதல், பெண்கள் முன்னேற்றம் போன்ற செயல்களில் இப்பிரிவு ஈடுபடுகிறது.

தமிழகத்தின் 7 மாவட்டங்களில் 15 மையங்களில் மாலை நேர துணைக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன.

மேலும் இங்கு கலை, கைவினைப் பணிகள் போன்ற பாடங்களைத் தாண்டிய செயல்பாடுகளில் ஆர்வத்தை அதிகரித்து, கற்றல் திறன்களை வளர்க்கும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இச்சமூகமக்கள் "அலை குடிமக்கள் உரிமை இயக்கம்" என்ற ஒரு அமைப்பை உருவாக்கி. முன்பிருந்த குற்றவாளி என்ற பழைய அடையாளத்தையும், காவல்துறை பதிவு செய்த போலி வழக்குகளையும் எதிர் கொள்ள செயல்படுகின்றனர்.

## தமிழ்நாடு தொழிலாளர்கள் உரிமைக்கான கூட்டமைப்பு (TLRF)

த.தொ.உ.கூட்டமைப்பு என்பது பெரும்பாலும் அருந்ததியர் உள்ளடக்கிய அமைப்பு சாரா தொழிலாளர்களை அரசின் தொழிலாளர் நலவாரியம் வழியாக அமைப்பாக்கும், முயற்சியாகும்.

தற்போது திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் நான்கு அமைப்புகள் உள்ளன.





அமைப்பு சாரா தொழிலாளர்களின் வேலை நிலைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், தொழிலாளர் அமைப்புகள் சட்ட நடவடிக்கைகளை கண்காணித்து நிர்வாகத் திறன்களை வளர்க்க உதவுவதும், அரசின் நலத்திட்ட உதவிகளை பெற வழிகாட்டுவதும் இப்பிரிவின் நோக்கமாகும்.

இந்த நான்கு தொழிலாளர் அமைப்புகள் வழியாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அருந்ததியர் தொழிலாளர்களை இணைத்து, அருந்ததிய மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் பிரச்சினைகளை பொது விவாதத்துக்கு த.தொ.உ. கூட்டமைப்பு கொண்டு வருகிறது. மேலும், கண்ணியமான வாழ்க்கைக்கான பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் பங்கேற்பை வலியுறுத்தி வருகிறது.

## நூலகம் மற்றும் ஆவணக் காப்பகம்

சுமார் 7000 தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகங்கள் பல்வேறு கருப்பொருட்களின் படி வகைப்படுத்தப்பட்டு, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள்,சமூக இயக்கத் தலைவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நோக்கத்திற்காக அளிக்கப்படுகின்றன.

ஆவணப்பிரிவில், தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் இருந்து சேகரிக்கப்பட்ட செய்தித் துணுக்குகள், கட்டுரைகள் கிடைக்கின்றன. சமூகத்துடன் தொடர்புடைய கருப்பொருட்கள் குறித்த மின்புத்தகங்கள் மற்றும் மின் ஆவணங்கள் (E-books & E-documents) டிஜிட்டலாக சேமிக்கப்படுகின்றன. Ideas Avanam மற்றும் Media Education என்ற மின் ஆவணங்கள் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றன.

மேலும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி ஆவணங்கள் இந்நிறுவனத்தின் பயிற்சி அமர்வுகளுக்கும் குழுக்களின் கூட்டங்களுக்கும் ஊடக வளங்களாக பயன்படுகின்றன.



Ideas
Institute of Development, Education, Action and Studies